

நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின்103வது பிறந்த நாளை முன்னிட்டு, கலைஞர் பிறந்த இல்லத்தில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர்அவர்களின் திருஉருவச்சிலைக்கு நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதைசெலுத்தினர்கள் உடன் தலைமைச் செயற்குழு உறுபினர்கள் இல.மேகநாதன், ப.கோவிந்தராசன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக்கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், கற்பகம்நீலமேகம், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், சோ.பா.மலர்வண்ணன், கே.பழனியப்பன், மகா.குமார், சிக்கல் என்.ஆனந்த, உதயம் வே.முருகையன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், கோ.சி.குமார், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன் மற்றும் பலர் உள்ளனர்.

# திருவாரூரில் கலைஞர் பிறந்தநாள் விழாவை எழுச்சியோடு கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

திருவாரூர்,ஜூன்4 -

மண்ணின் மைந்தர் கலைஞர் பிறந்தநாள் விழாவை மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவோம் என திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவாரூர் மாவட்டக்கழக செயல்வீரர்கள் கூட்டம் அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தீர்மானங்களை விளக்கி பேசினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின் வருமாறு,

“தண்டவாளத்தில் தலைவைத்துப்படு என்றாலும் ஆட்சிப்பொறுப்பை ஏற்றிடு என்றாலும் இரண்டையுமே ஒன்றாக கருதுபவன் என் தம்பி கருணாநிதி” என பேரறிஞர் அண்ணா அவர்களால் பெருமைப்படுத்தப்பட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ் கூறும் நல்லுலகிற்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை தந்த மாவட்டமான திருவாரூர் மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர், கழகங்கள், வார்டு மற்றும் கிளை கழகங்கள் தோறும் கழக கொடி ஏற்றியும், ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்போடு கொண்டாடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவில் தமிழ்நாடும் ஒரு மாநிலம் என்பதை மறந்து, தமிழ்நாட்டு விவசாயிகளையும் விவசாயத்தையும் அழிக்கின்ற நோக்கத்தோடு கர்நாடக மாநிலம் மேகதாதுவில் ஆளும் காங்கிரஸ் கட்சி அணைக்கட்டும் முயற்சி களை கண்டித்தும் மேகதாதுவில் அணைக்கட்டும் நடவடிக்கைகளை கர்நாடக காங்கிரஸ் ஆட்சி உடனடியாக நிறுத்தும் படியும் வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ். கார்த்திக் எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தலையாமங்கலம் ஜி.பாலு, ப.ஆடலரசன், சு. ஞானசேகரன், செல்வம், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர் கழக செயலாளர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் மாவட்டப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு வலையப்பேட்டை கலைஞர் கோட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன், கழக சட்டத்திட்ட திருத்த குழு தலைவர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தனி உதவியாளராக பணியாற்றிய முத்து வாவாசி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர ஒன்றிய, பகுதி, பேரூர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

# எண்ணாத நாளில்லை!



- கலைஞர் திருமகனே!
  அஞ்சுகத்தாயின்
  ஒரேமகன்ஆகையால்
  நீஒன்றானவன்

- கருப்பென்றும்
  சிவப்பென்றும்
  இரண்டானவன்

- பிறந்தநாளால்
  மூன்றானவன்

- தியாகராயர்பெரியார்
  அண்ணாகலைஞர்என்ற
  வரலாற்றுவரிசையால்
  நான்கானவன்

- தமிழ்நாட்டுமுதலமைச்சராய்
  ஐம்முறைஆண்டதால்
  ஐந்தானவன்

- தமிழுக்குஇனிப்பு
  இந்திக்குக்கசப்பு
  ஏழைக்குஉப்பு
  வயிற்றில்கரைத்ததால்
  எதிரிக்குப்புளிப்பு
  வாதத்தில்உறைப்பு
  பித்தம்நீக்கும்துவர்ப்பு
  அறுவகைச்சுவைகளால்
  ஆறானவன்

- வாரமெல்லாம்செய்தியானதால்
  ஏழானவன்

- திசையெல்லாம்
  இசைபடவாழ்ந்ததால்
  எட்டானவன்

- கிரகங்களெல்லாம்சுற்றிவந்த
  சூரியன்என்பதால்
  நீநவமானவன்

- உன்னை
  எண்ணங்களாலும்
  சிந்திக்கலாம்;
  எண்களாலும்சிந்திக்கலாம்

- இன்று மட்டுமா
  உன் பிறந்தநாள்?
  உதய சூரியன் உதிக்கும்
  ஒவ்வொரு நாளும்
  உன் பிறந்தநாள்தான்

- கேள்விகளுக்கு
  விடையும்நீதான்
  தோல்விகளுக்கு
  மருந்தும்நீதான்

**கவிப்பேரரசு**
**வைரமுத்து**


